போர்களும் தானிய சேமிப்புகளும் சேதமடைந்து உள்ள நிலை பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 14-6-1968 முதல் 14-8-1968 வரை உள்ள காலத்தில் 11 தீ விபத்துக்கள் ஏற்பட்டன. அவை பற்றிய விவரங்கள் கீழே உள்ள பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளன. இத் தீ விபத்துக்களின் விளைவாக 12 பேர் உயிரிழந்தனர். நிவாரணத் தொகை ரூ. 46,840 வழங்கப்பட்டது.

தீ விபத்து நடந்த தேதி. (1)	இடம். (2)	வழங்கப்பட்ட நிவாரணத் தொகை. (3) ரூ.
14-6-1968 ..	சினுப்பானூர் கிராமம், அரியலூர் தாலுகா.	7,320
24-6-1968 ..	திருவரம்பூர் கிராமம், திருச்சிராப்பள்ளி தாலுகா.	..
26-6-1968 ..	மேலரசூர் கிராமம், லால்குடி தாலுகா ..	10,000
10-7-1968 ..	ஸ்ரீரங்கம், திருச்சிராப்பள்ளி தாலுகா ..	..
14-7-1968 ..	பெரியார் நகர், வருகனேரி கிராமம், திருச்சிராப்பள்ளி தாலுகா.	12,440
16-7-1968 ..	வையம்பட்டி கிராமம், மணப்பாறை தாலுகா.	..
19-7-1968 ..	புத்தூர் h/o ஆண்டிபட்டகாடு, அரியலூர் தாலுகா.	..
24-7-1968 ..	மேட்டுப்பட்டி கிராமம், லால்குடி தாலுகா.	8,720
27-7-1968 ..	கணக்கப்பட்டி கிராமம், கரூர் தாலுகா.	..
14-8-1968 ..	திருமலப்பாடி கிராமம், அரியலூர் தாலுகா.	6,040
14-8-1968 ..	அழகாபுரி கிராமம், துறையூர் உபதாலுகா.	2,320

திரு. ஆர். கருப்பையா : இந்த எரிந்துபோன வீடுகளைக் கட்டிக்கொள்ள அந்த விவசாயிகளுக்கு 2,000. 3,000 ரூபாய் கடனுக, ஐந்து வருடத் தவணைக் கடனுக குறைந்த வட்டியில் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : நான் ஏற்கனவே இந்த மன்றத்தில் சொல்லியிருக்கிறேன். ஹரிஜன மக்களைப் பொறுத்த வரையில் ரூ. 300 வட்டியில்லாக் கடன் கொடுக்கப்படுகிறது ஒரு நபர் ஜாமீன்மீது. தக்காவிக் கடன் என்ற முறையிலும் வாங்குவதற்கு வாய்ப்பிருக்கிறது.

5. தன்னிலை விளக்கம்.

திரு. க. இராமமூர்த்தி ஆற்றிய உரையில் திருத்தம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு இராமமூர்த்தி அவர்கள் ஒரு விளக்கம் அளிப்பார்கள்.

திரு க. இராமமூர்த்தி : இந்த அவையின் அனுமதியோடு 24-8-1968 அன்று நான் பேசியபோது சொல்லிய விவரங்களில் ஒன்றிரண்டைத் திருத்திக் கொள்ள விரும்புகிறேன்.

சேலம் மத்தியச் சிறையில் ஒரு கைதி இறந்ததேதி 8-8-1968 என்று சொல்லியிருந்தேன். அதை 6-8-1968 என்று திருத்திக்கொள்ள வேண்டுகிறேன். அந்தக் கைதி செங்கல்பட்டு சப் ஜெயிலிலிருந்து சேலம் மத்திய சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகச் சொல்லியிருந்தேன். செங்கல்பட்டு சப் ஜெயில் என்பதை சைதாப்பேட்டை போலீஸ் நிலயம் என்று திருத்திக்கொள்ள வேண்டுகிறேன்.